05.07.2019 OS 58/2016

வா.சா. 1 கலா

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

**குறுக்கு விசாரணை**

என் தகப்பனாரை பெற்ற தகப்பனார் பெயர் ராமசாமி செட்டியார். எனது தாத்தா ராமசாமி செட்டியாருக்கு மொத்தம் 5 மகன்கள் பெண் பிள்ளைகள் 5 பேர்கள். அவருக்கு 2 மனைவிகள். ராமசாமி செட்டியாருக்கு பூர்வீக பாத்தியமான சொத்துக்கள் விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் வயல்பட்டியில் 1வீடும், முத்துதேவன்பட்டியில் தோட்டமும் மற்றும் கஜனா பாறையில் ஏலக்காய் எஸ்டேட்டும், தேனி பெரியகுளம் ரோட்டில் 1 கடையும் போடேந்திரபுரத்தில் வயலும் இருந்தது. ராமசாமி செட்டியாரும் அவரது மக்களும் பூர்வீக சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை செய்து கொண்ட விபரம் எனக்கு தெரியும். 1961ம் வருடம் பாகபிரிவினை செய்து கொண்டார்கள். அந்த பாகபிரிவினை பத்திரம் தான் நான் வாதி தரப்பு வாசாஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1961ம் வருடத்திய பத்திரம் எனக்கு 2015ம் வருட வாக்கில் வாசாஆ1 என் கைக்கு கிடைத்தது. 1961ம் வருடத்தில் பாக பிரிவினன செய்து கொண்டதில் என் அப்பாவுக்கு தனியாக செடியூல் ஒதுக்கப்பட்டுள்ளது. என் அப்பாவுக்கு எந்த செடியூல் ஒதுக்கப்பட்டது என்றால் “பி” செடியூல் ஒதுக்கப்பட்டது. அவருக்கு “பி” செடியூலில் தோட்டத்தில் தென்னந்தோப்பு, மலையில் எஸ்டேட் ஒதுக்கப்பட்டது. தென்னந்தோப்பு சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. தென்னந்தோப்பு மொத்தம் 1 ஏக்கர் 56 செண்ட் இருக்கும். தென்னந்தோப்பின் நான்கு மால்கள் தெற்கு என் சித்தப்பா பாண்டித்துரையின் இடமும், வடக்கு அபிருபன் இடமும், கிழக்கு வாய்க்காலும், மேற்கு வேறு ஒருவரின் இடமும் உள்ளது. என்அப்பா பெயருக்கு தென்னந்தோப்பு தனிப்பட்டா எதுவும் ஏற்பட்டதா என்றால் தனிப்பட்டா உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

தற்போது தென்னந்தோப்பு என் தம்பி மனைவி 4வது பிரதிவாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது. என் அப்பா 14.10.2012ல் இறந்துவிட்டார். என் அப்பா காலமானபிறகு தென்னந்தோப்பை என் பெயரிலோ அல்லது மற்ற பெண் பிள்ளைகள் பெயரிலோ பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்படவில்லை. பட்டா மாறுதல் செய்து தருவதாக கூறியிருந்தார். எனக்கு திருமணம் 1987ல் நடைபெற்றது. 2ம் பிரதிவாதி சரோஜாவுக்கு 1976ல் திருமணம் நடைபெற்றது. 3ம் பிரதிவாதி லதாவுக்கு 1984ல் திருமணம் நடைபெற்றது. 1961ல் பாகபிரிவினை செய்துவிட்டு என் அப்பா பெயரில் சொத்துக்கள் இருந்தால் அது அவருடைய தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்களில் நானோ, 2, 3 பிரதிவாதிகளோ பாகம் கேட்க முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் தென்னந்தோப்பை பொறுத்த மட்டிலும் பாகம் கேட்க வேண்டும் என்றால் என் அப்பா உயிருடன் இருக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அதனடிப்படையில் எனக்கு பொது குடும்ப உறுப்பினர் என்ற அந்தஸ்து ஏற்படாது என்று சொன்னால் சரியல்ல. 2வது இலக்கச் சொத்தை பொறுத்து மட்டிலும் எனக்கு நேரடியாக எந்த விபரமும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. என் பிராதில் 2 வது இலக்க சொத்துக்கள் எந்த பட்டாவில் அடங்கி இருக்கிறது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 2வது இலக்கச் சொத்தில் நான் 6 இலக்க சொத்துக்களுக்கும் நான்குமால்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். வாசாஆ2 ஐ நான் பிராதில் 3வது இலக்கச் சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 3வது இலக்கச் சொத்தை என் அப்பா உயிருடன் இருக்கும்போதே போடியில் உள்ள முத்துராஜ் என்பவருக்கு குத்தகைக்கு விட்டிருந்தார். அந்த குத்தகையை எந்த தேதியில் எழுதிக்கொடுத்தார் என்பதை நான் தேடிக்கண்டுபிடித்தேனா என்றால் இல்லை. 3வது இலக்க சொத்திற்கு பட்டா என் அப்பா பெயரில் உள்ளது. அந்த பட்டா அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட தற்காலிக பட்டா என்று சொன்னால் என் தாத்தா இருக்கும்போதே அவர் பெயரில் பட்டா பெற்றுள்ளதாக எனக்கு

தெரியவந்தது. நான் 3வது இலக்க சொத்தை நானோ, 2,3 பிரதிவாதிகளோ அனுபவம் செய்து வருவதாக உரிய ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1வது இலக்க சொத்தான வயல்பட்டியில் உள்ள வீட்டை என் அப்பா இறந்ததற்கு பின்பு எங்கள் பெயரில் பெயர் மாற்றம் செய்வதற்கு எந்த விதமான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 1வது இலக்கச்சொத்தை 4ம் பிரதிவாதி தான் தற்போது அனுபவம் செய்து வருகிறார். பிராதில் 4வது இலக்க சொத்தாக காட்டியுள்ள 15 செண்ட் இடம் என் அப்பாவுக்கும், என் கணவருக்கும் பொது பாத்தியப்பட்ட சொத்தாகும். அந்த 15 செண்ட் இடம் பிரிக்கப்படாத சொத்தாகும். அந்த 15 செண்டை பொறுத்த மட்டும் என் கணவர் தனக்கு பாத்தியப்பட்டது என்று தேனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓஎஸ் 27/2015 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கை என் கணவர் மட்டும் தாக்கல் செய்ததால் என் அப்பாவின் வாரிசுகள் அனைவரையும் கட்சிக்காரர்களாக சேர்க்கவேண்டும் என்பதற்காக மனு தாக்கல் செய்து அந்த மனுவானது அனுமதிக்கப்பட்டு வழக்கும் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்).S.சீனிவாசன், B.Sc.,M.L.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி